# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,920 — 1970 අගෝස්තු 21 වැනි සිකුරාද — 1970.8.21

14,920 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஒகத்து மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 251 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. .. .. | 255 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | 257 |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 (1) ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்புக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை அக் கிராமப் பிரதேசத்தில் அக் கட்டளைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் கீழ் ஒரு காணி வரியை விதித்து அறவிடுவதற்கு இந்த அறிவித்தல் வாயிலாக அக் கிராம சபைக்கு அதிகாரமளிக்கிறேன்.

ඵෆ්. ආර්. ඩී. බණ්ඩාරනායක,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 6 ந் உ.

8–775—21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

---

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை.

ඵෆ්. ආර්. ඩී. බණ්ඩාරනායක,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள், அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 7 ந் உ.

#### கட்டளை

பதுளை மாவட்டத்திலுள்ள கெப்பெற்றிப்பொலைக் கிராமப் பிரதேசத்தின் எல்லைகளை மாற்றி, மீளவரையறை செய்வது சம்பந்தமாக 1969 நவெம்பர் 14 ந் திகதிய 14,880 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையானது, அதனோடுள்ள அட்டவணையில் " கெப்பெற்றிப்பொல " என்னும் வார்த்தைக்குப் பதிலாக " தெஹிபொல " என்னும் வார்த்தையை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

8–764/1—21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 (அ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் இவ்வறிவித்தலினால்—

(1) பதுளை மாவட்டத்திலுள்ள கெப்பெற்றிப்பொலைக் கிராமப் பிரதேசத்தின் 3 ம் வட்டாரமான வெலிமடகமையின் எல்லைகள் பின்வருமாறிருத்தல் வேண்டுமெனவும் :—

"3 ம் வட்டாரம்—வெலிமடகமை—வெலிமடைப்பட்டின சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் வரும் பகுதி நீங்கலாக தெஹிபொலைக் கிராமசேவகர் பிரிவில் (48) உள்ள வெலிமடகமைக் கிராமத்தைக் கொண்டது." அத்துடன்,

(2) இவ்வறிவித்தலின் ஏற்பாடுகள் 1971 சனவரி 1 ந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டுமெனவும், வெளிப்படுத்துகிறேன்.

எவ். ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 7 ந் உ.

8–764/2—21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

---

எல். டி.—பி. 39/52 : எல்ஜிடி./எச்/1/3/5

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

### கட்டளை

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 47 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் சொல்லப்பட்ட பிரிவின் (1) ஆம் உட்பிரிவு மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தை வடக்குக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபைக்கு ஏற்புடையதாதலாகாது என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

எவ். ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க, நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு யூலை மீ 20 ந் உ.

8–758–21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

---

## களியாட்டவரிக் கட்டளைச் சட்டம்

(267 ம் அத்தியாயமான) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சாவகச்சேரி நகர சபையால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம், அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்நியதிப்படி அரசாங்க நிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுப் பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

சபையின் நிருவாக எல்லைகளுக்குட்பட்ட பிரதேசத்தில் நடைபெறும்(கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டபடியான) களியாட்டங்களுக்கான பிரவேசக்கட்டணங்கள் மீது 24.2.1961 ன் 12,298 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்தினால் விதித்து அறவிடப்பட்ட வரிக்குப் பதிலாக இதன் கீழ் குறித்துள்ள வீதங்களின் படியான ஒருவரியை, இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரமாகும் தேதி தொடக்கம் "இச்சபை, (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக்கட்டளைச் சட்டத்தின் 2 ஆம்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் விதித்து அறவிடுகின்றது :—

### பிரவேசக்கட்டணம்

வரித்தொகை நீங்கலான பிரவேசக்கட்டணம்—

| | | வரி வீதம் ரூ. ச. |
|---|---|---|
| (அ) | 20 சதத்துக்கு குறையாமலும் 40 சதத்துக்கு மேற்படாமலுமிருப்பின் .. .. .. | 0 05 |
| (ஆ) | 40 சதத்துக்கு மேற்பட்டு 50 சதத்துக்கு மேற்படாதிருப்பின் | 0 10 |
| (இ) | 50 சதத்துக்கு மேற்பட்டு 1 ரூபாவுக்கு மேற்படாதிருப்பின் | 0 20 |
| (ஈ) | 1 ரூபாவுக்கு மேற்பட்டு 1.50 ரூபாவுக்கு மேற்படாதிருப்பின் | 0 30 |
| (உ) | 1.50 க்கு மேற்பட்டு 2 ரூபாவுக்கு மேற்படாதிருப்பின் .. | 0 40 |
| (ஊ) | 2 ரூபாவுக்கு மேற்பட்டு 3 ரூபாவுக்கு மேற்படாதிருப்பின் | 0 60 |
| (எ) | 3 ரூபாவுக்கு மேற்பட்டு 4 ரூபாவுக்கு மேற்படாதிருப்பின் | 0 80 |
| (ஏ) | 4 ரூபாவுக்கு மேற்பட்டு 5 ரூபாவுக்கு மேற்படாதிருப்பின் | 1 00 |
| (ஐ) | 5 ரூபாவுக்கு மேற்பட்டு 10 ரூபாவுக்கு மேற்படாதிருப்பின் | 2 00 |
| (ஒ) | 10 ரூபாவுக்கு மேற்படுமிடத்து— | |
| | (1) முதலாவது ரூபா 10 க்கு .. .. | 2 00 |
| | (2) கூடுதலான ஒவ்வொரு 5 ரூபாவுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. | 1 00 |

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஓகத்து மீ 7 ந் உ.

பி. சிறிவர்த்தன,
அரசாங்க, நிர்வாக உள்நாட்டலுவல்கள் நிரந்தர செயலாளர்.

8–771—21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பம்பறபொட்டுக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

பீ. எச். சிறீவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 7 ந் உ.

### துணைவிதிகள்

கட்டடங்கள், எல்லை மதில்கள், வாயில்முகப்புகள் ஆகியவற்றை எழுப்புதல்

1. எவரும், கிராமப் பிரதேசத்தினுள் கட்டடம் அல்லது எல்லை மதில் எதனையும் அல்லது வாயில் முகப்பு எதனையும்—

(அ) கிராமத் தெரு எதனதும் மத்தியிலிருந்து இருபது அடி தூரத்துக்குள் அல்லது,

(ஆ) காலக்கிரமத்தில் ஒரு கிராமத் தெருவாக மாற்றப்படவிருக்கின்றது என சபையினால் அறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கும் கிராமப் பாதை எதனதும் மத்தியிலிருந்து இருபது அடி தூரத்துக்குள்,

(இ) (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்ட பாதையல்லாத வேறு கிராமப் பாதை எதனதும் மத்தியிலிருந்து பத்து அடி தூரத்துக்குள் எழுப்புதல் ஆகாது.

2. எவரும் கிராமப் பிரதேசத்தினுள் 1 ஆம் துணைவிதிகள் குறிப்பிடப் பட்ட கிராமத் தெரு அல்லது பாதை எதனதும் ஓரமாக கட்டடம், எல்லை மதில் அல்லது வாயில் முகப்பு எதனையும் அத்தகைய கட்டடம், எல்லை மதில் அல்லது வாயில் முகப்பைக் கட்டுவதற்கு எண்ணியிருப்பது பற்றி அத்தகைய கட்டடவேலை தொடங்குதற்கு எண்ணியுள்ள திகதிக்கு குறைந்தது முப்பது நாட்களுக்கு முன்னர் எழுத்து மூலமாக அறிவித்தல் கொடுத்து அதற்காகத் தலைவரிடமிருந்து அனுமதிப்பத்திரமொன்று பெற்றாலன்றி கிராமப் பிரதேசத்தினுட் கட்டத் தொடங்கலாகாது.

3. எவராயினும் 2 ஆம் துணைவிதியின் ஏற்பாடுகளை மீறி ஒரு புதிய கட்டடம், எல்லை மதில் அல்லது வாயில் முகப்பு எதனையும் கட்டியிருந் தால் அல்லது கட்டத் தொடங்கியிருந்தால் தலைவர் அவருக்கு அறிவித் தல் கொடுப்பதன் மூலம் அத்தகைய கட்டடம், எல்லை மதில் அல்லது வாயில் முகப்பை உடைக்கும்படி கட்டளையிடலாம்.

4. 3 ம் துணைவிதியின் கீழ் அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வரும், அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்துக்குள் அவ்வறி வித்தலில் குறிப்பிடப்பட்ட மதில், கட்டடம் அல்லது வாயில் முகப்பை உடைக்க வேண்டும் அல்லது உடைப்பிக்க வேண்டும்.

### உத்தியோகத்தர்களும் சேவையாளர்களும்

5. சபைக்குரிய வரிகளையும் கட்டணங்களையும் அறவிடும்படியும், தலை வரின் கையொப்பத்தின் படியுருவினையும், சபையின் முத்திரையையுங் கொண்ட அச்சிட்ட பற்றுச்சீட்டுக்களை வழங்கும்படியும் உத்தியோகத்தர் அல்லது வேறு ஆள் எவருக்கும் தலைவர் எழுத்தில் அதிகாரமளிக்கலாம்.

6. வேண்டுமென்று எவரும்—

(அ) தலைவர் அல்லது சபையின் வேறு உத்தியோகத்தர் எவரும் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது எதன் கீழ் ஆக்கப்பட்ட துணைவிதிகள் எதனுலும் அல்லது அதன் கீழும் தமக்களிக்கப் பட்ட அல்லது தம்மீது சுமத்தப்பட்ட அல்லது தம்மிடம் சாட்டப்பட்ட அதிகாரம், கடமை அல்லது காரியம் எதனையும் பிரயோகிப்பதை, நிறைவேற்றுவதை அல்லது செய்வதைத் தடுக்கவோ ; அல்லது

(ஆ) சபையினால் அல்லது சபைக்காக வேலைக்கமர்த்தப்பட்டிருக்கும் ஊழியர் அல்லது தொழிலாளி எவரும், தலைவரால் அல்லது சபையின் வேறு உத்தியோகத்தர் எவராலும் தம்மீது சட்டபூர்வ மாகச் சுமத்தப்பட்ட கடமையை நிறைவேற்றுவதைத் தடுக்கவோ கூடாது.

### பொது அறிவித்தல்கள்

7. சபையின் கட்டளையின் பேரில் பார்வைக்கு வைக்கப்படும் அறிவித்தல் எதனையும் எவரும் விகாரப்படுத்தவோ அழிக்கவோ கூடாது.

8. கட்டளைச் சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எத்துணை விதியின் ஏற்பாடுகள் எதன்கீழும் சபையினால் வேலை எதையும் நிறை வேற்றுவதில் தலைவரால் அல்லது தலைவரது அதிகாரத்தின்கீழ் வைக்கப் பட்டுள்ள எந்த அறிவித்தலிலும் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புரைகளை எவரும் வேண்டுமென்று மீறவோ அல்லது அறிவிப்புப்பலகை, வேலி, கம்பம் அல்லது தடை அல்லது ஏனைய பொருட்களை எதையும் அகற்றவோ கூடாது.

### கொண்டுதிரிந்து விற்பனை செய்வோர்

9. எவரும் காய்கறிகள், பழம், மீன் அல்லது இறைச்சியைக் கொண்டுதிரிந்து விற்பனை செய்யும் ஒருவரது வியாபாரத்தை, தலைவரால் அதன் சார்பில் வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரமொன்றின் பேரிலன்றிச் செய்யக்கூடாது.

10. 9 ஆம் துணைவிதியின் கீழ் வழங்கப்படும் உத்தரவுப்பத்திரம் ஒவ்வொன்றும் அது எந்த வருடத்துக்காக வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதத்து முப்பத்தோராம் நாளன்று காலா வதியாகும்.

11. 9 ஆம் துணைவிதியின் கீழுள்ள உத்தரவுப்பத்திரமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் சபையினால் அந்நோக்கத்துக்கு வழங்கப் படும் படிவத்தில் செய்யப்படுவதுடன்—

(அ) அவ்வாறான விண்ணப்பம் புதிய உத்தரவுப்பத்திரமொன்றுக்காக இருக்குமிடத்து வியாபாரம் தொடங்குவதற்கு முன்னர் 30 தினங்களுக்கு குறையாமலும்

(ஆ) அவ்வாறான விண்ணப்பம் தற்போதுள்ள உத்தரவுப்பத்திர மொன்றைப் புதுப்பிப்பதற்காக இருக்குமிடத்து, அந்த உத்தரவுப் பத்திரத்தை எந்த வருடத்துக்குப் புதுப்பிக்க வேண்டியிருக்கிற தோ அவ்வருடத்துக்கு முந்திய வருடத்தின் செத்தெம்பர் மாதத்து 1 ந் தினத்திலன்று அல்லது அதற்கு முன்னராக

தலைவருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவும் வேண்டும்.

### உத்தரவுப் பத்திரங்களுக்கும் அனுமதிப்பத்திரங்களுக்குமான விண்ணப்பம்

12. சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் நியமத்துணைவிதி களின் 7, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 22, 27, 38 ஆகிய பாகங்களில் காணப்படும் துணைவிதிகளின் கீழ் வழங்கப்படும் உத்தரவுப் பத்திரம் ஒவ்வொன்றும், அத்துணைவிதிகளின் கீழ் முன்கூட்டி இரத்து செய்யப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறான உத்தரவுப்பத்திரம் எவ்வருடம் சம்பந்தமாக வழங்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெமபர் மாதத்து முப்பத்தோராம் தினத்தன்று காலாவதியாகும்.

13. சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் நியமத்துணைவிதி களின் 7, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 22, 27, 38 ஆகிய பாகங்களில் காணப்படும் துணைவிதிகளின் கீழான உத்தரவுப்பத்திரத்துக் கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் சபையினால் அந்நோக்கத்துக்கு வழங்கப்படும் படிவத்தில் செய்யப்படுவதுடன்—

(அ) அவ்வாறான விண்ணப்பம் புதிய உத்தரவுப்பத்திரமொன்றுக்காக இருக்குமிடத்து அந்த உத்தரவுப்பத்திரம் தேவைப்படும் வியா பாரத்தை தொடங்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் திகதிக்கு முன்னர் 30 தினங்களுக்குக் குறையாமலும்

(ஆ) அவ்வாறான விண்ணப்பம் தற்போதுள்ள உத்தரவுப்பத்திர மொன்றைப் புதுப்பிப்பதற்காக இருக்குமிடத்து அந்த உத்தரவுப் பத்திரத்தை எந்த வருடத்துக்குப் புதுப்பிக்கவேண்டியிருக்கிறதோ அவ்வருடத்துக்கு முந்திய வருடத்தின் செத்தெம்பர் மாதத்து 1 ந் தினத்திலன்று அல்லது அதற்கு முன்னர் தலைவருக்குக் கிடைக்கக்கூடியதாக

அனுப்பப்படவும் வேண்டும்.

### கழுவுதலும் குளித்தலும்

14. பொதுக் கிணறு அல்லது குளிக்கும் இடம் எதிலுமிருந்து தண்ணீர் அள்ளும் நோக்கத்துக்காக சுத்தமில்லாத கொள்கலன் எதையும் எவரும் உபயோகிக்கக்கூடாது.

15. தீர்மானமொன்றை நிறைவேற்றுவதன்மூலம் பொதுக்கிணறு, நீரூற்று, பொது நீர்க்குழாய் அல்லது வேறு நீர்நிலை எதிலும் கழுவுதலை அல்லது குளித்தலைத் தடைசெய்வதற்குச் சபைக்குச் சட்டரீதி யான உரிமையாதல் வேண்டும்.

16. (1) கழுவுதற்கு, குளிப்பதற்கு அல்லது மனித பாவனைக்கு நீர் எடுப்பதற்கு அல்லது மிருகங்களைக் குளிப்பாட்டுதற்கு குளம் அல்லது நீர் நிலை எதிலும் விசேட இடங்களைச் சபை அதன் உசிதாசாரப்படி ஒதுக்கலாம். இப்பந்தியிலுள்ள எதுவும் நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள் ஆக்கப்பட்டுள்ள நீர்ப்பாசன வேலை எதற்கும் பொருத்த முடையதாகாது.

(2) ஒரு நோக்கத்துக்காக சபையினால் ஒதுக்கப்பட்டுள்ள எந்த இடத்தையும் அந்நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்துக்கும் எவரும் பாவிக்கக்கூடாது.

17. கிராமப் பிரதேசத்தில் தண்ணீர்த்தட்டுப்பாடு இருப்பதாகச் சபை வெளிப்படுத்தியிருக்கும் சமயத்தில் எவரும் சபையினால் குறிப்பிடப் பட்டுள்ள காலத்தின் போது பொதுக்கிணறு பொது நீர்க்குழாய், குளம் அல்லது வேறு நீர்நிலை எதிலுமிருந்து வண்டி அல்லது பீப்பா எதிலும் நீர் எதையும் எடுத்துச் செல்ல அல்லது தலைவரின் எழுத்திலான அனுமதியின்றி, தலைவரினால் காலத்துக்குக் காலம் குறிப்பிடப்பாலதான அளவுக்கு அதிகமான நீர் எதையும் அவ்வாறான கிணறு, பொது நீர்க்குழாய், குளம் அல்லது வேறு நீர் நிலையிலிருந்து எடுத்துச் செல்ல அல்லது எடுத்துச் செல்லவைக்கக் கூடாது.

18. ஒரு நீரூற்றினால் நிரப்பப்படும் கிணறு எதுவுமுள்ள எக்காணியினதும் சொந்தக்காரர், கூட்டுடமையாளர், குடியிருப்பவர், அல்லது குத்தகைக்காரர் அக்கிணற்றினுள் வெய்யில் விழாதவாறு தடை செய்வதற்கு ஏற்றவொரு நிழலை அக்கிணற்றுக்கு அமைக்க வேண்டும்.

19. இந்துணைவிதிகளில்—

"தலைவர்" என்பது சபையின் தலைவர் எனப்பொருள்படும்.

"சபை" என்பது பம்பரபொட்டுவைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை எனப்பொருள்படும்.

"கட்டளைச்சட்டம்" என்பது (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம் எனப்பொருள்படும்.

8-778—21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920.

---

## களியாட்டவரிக் கட்டளை சட்டம்

(267 ஆம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் மொனறாகலை மாவட்டத்திலுள்ள பிந்தனை தெற்கு கிராமப்பிரதேசத்தின் கிராமச்சபையினால் நிறைவேற்றப் பட்ட பின்வரும் தீர்மானம் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினால், அப் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

இந்தீர்மானம் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து சபையின் நிருவாக எல்லைக்குள் நடத்தப்படும் (கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப் பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக்கட்டணங்கள் மீது, (267 ஆம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்கீழ், இதன் கீழ் காணப்பட்டுள்ள விகிதங்களின்படியான ஒரு வரியை இச்சபை இந்தால் விதித்து அறவிடு கின்றது.

### கட்டணத்தொகை

வரித்தொகை நீங்கலாக அனுமதிக்கட்டணம் :—

| | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|
| (அ) 10 சதத்துக்கு குறையாமலும் ஆனால் 50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 05 |
| (ஆ) 50 சதத்துச்கு மேற்படவும் ஆனால் 1 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 10 |
| (இ) 1 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபா 50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 15 |
| (ஈ) 1 ரூபா 50 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 2 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 20 |
| (உ) 2 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 3 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 30 |
| (ஊ) 3 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 5 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 40 |
| (எ) 5 ரூபாவுக்கு மேற்படமிடத்து தொகையின் 25 சதவீதம் | |

பீ. சிறிவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு

8-754—21 8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

---

## களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்து தெல்லிப்பளைக் கிராமப் பிரதேசத்துக் கிராம சபையால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அரசாங்க நிர்வாகக் உள்ளூராட்சி உள்நாட்டலுவலுகள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிப்படி. பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

"இச் சபையானது (267 ம் அத்தியாயமான) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் சபையின் நிர்வாக எல்லைக்குள் நடைபெறும் (கட்டளைச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டிருக்கும்) களியாட்டங்களின் பிரவேசக் கட்டணங்கள் மீது இதன்கீழ்க் குறித்துள்ள விகிதங்களின் படியான ஒரு வரியை, இந் தீர்மானம் கசெற்றிற் பிரசுரிக்கும் திகதியிலிருந்து, இத்தால் விதித்துத் திரட்டு கின்றது.

### கட்டணத் தொகை

வரித்தொகை நீங்கலாகப் பிரவேசக் கட்டணம் :

| | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|
| (அ) 20 சதத்திற்குக் குறையாமலும் 50 சதத்திற்கு மேற்படாமல் இருத்தல் .. .. | 0 05 |
| (ஆ) 50 சதத்திற்கு அதிகமாகவும் ரூபா 1 க்கு மேற்படாமலும் இருத்தல் .. | 0 10 |
| (இ) ரூபா 1 க்கு அதிகமாகவும் ரூபா 1.50 க்கு மேற்படாமலும் இருத்தல் .. .. | 0 15 |
| (ஈ) ரூபா 1.50 க்கு அதிகமாகவும் ரூபா 2 க்கு மேற்படாமலும் இருத்தல் .. | 0 20 |
| (உ) ரூபா 2 க்கு அதிகமாகவும் ரூபா 3 க்கு மேற்படாமலும் இருத்தல் .. .. | 0 30 |
| (ஊ) ரூபா 3 க்கு அதிகமாகவும் ரூபா 4 க்கு மேற்படாமலும் இருத்தல் .. | 0 40 |
| (எ) ரூபா 4 க்கு அதிகமாகவும் ரூபா 5 க்கு மேற்படாமலும் இருத்தல் .. .. | 0 50 |
| (ஏ) ரூபா 5 க்கு அதிகமாகவும் ரூபா 10 க்கு மேற்படாமலும் இருத்தல் .. | 1 0 |
| (ஐ) ரூபா 10 க்கு மேற்பட்டால்— | |
| (1) முதலாவது ரூபா 10க்கு .. .. | 1 0 |
| (2) கூடுதலான ரூபா 5 க்கு அல்லது அதற்குக் குறைந்த தொகை ஒவ்வொன்றிற்கும் .. .. | 1 0 |

பி. சிறிவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1970

8-753—21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ஆவது பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் ரெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்கா ஆகிய நான், கொழும்பு மாவட்டத்திலுள்ள தலஹெனைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை அக்கிராமப் பிரதேசத்தில் ஒரு காணிவரியை அப்பிரிவின்கீழ் விதித்து அறவிடுவதற்கு அக்கிராமச் சபைக்கு இவ்வறிவித்தல் வாயிலாக அதிகாரமளிக்கிறேன்.

எப். ஆர். டி. பண்டாரநாயக்கா,
அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜுலை மீ 28 ந உ.

8-776/1—21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 (2) ம் பிரிவின் கீழ் அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

எப். ஆர். டீ. பண்டாரநாயக்கா,
அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவலல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ௵ ஆகஸ்ட் மீ 6 ந் டெ.

#### கட்டளை

தலஹேனக் கிராமச் சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் உள்ள பிரதேசமானது கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ம் பிரிவின் (2) ம் உட்பிரிவின் 3 ம் காப்புரையிற் குறிப்பிடப்பட்டுள்ள ஏக்கர் வரியை விதித்து அறவிடும் நோக்கத்துக்கான விசேட பிரதேசமொன்றாக இருத்தல் வேண்டுமென இத்தால் பிரகடனப் படுத்தப்படுகிறது.

8–776/2—21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

## துணை விதிகள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆவது பிரிவின் கீழ் காலி மாவட்டத்திலுள்ள கோதாகொடைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆவது உட்பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

பீ. சிறிவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ௵ ஆகஸ்ட் மீ 7 ந் டெ.

#### அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்கள் சம்பந்தமான துணைவிதிகள்

1961 மார்ச்சு 3 ந் திகதிய 12,304 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அருவருப்பானவையும் அபாயகரமானவையுமான தொழில்கள் சம்பந்தமான துணைவிதிகள் இதனாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :—

(1) பந்தியின் கண்ணுள்ள (1) ம் பந்தியின் இறுதியில் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் :—

மொத்த விற்பனையின் பொருட்டு பதனழியக்கூடிய உணவுப்பொருட்களையும் பதார்த்தங்களையும் சேகரித்துவைத்திருத்தல்

வெட்டுமரக்காலையொன்று வைத்திருத்தல்

மின்சார அல்லது வானொலிப்பெட்டிகள் திருத்தும் கடையொன்று அல்லது வானொலிப்பெட்டித் தொழிற்கூடமொன்று வைத்திருத்தல்

சுண்ணும்புச் சூளையொன்று வைத்திருத்தல்

மிட்டாய் வகைகள் உற்பத்தி செய்தல்

வர்ணப்பூச்சுகள் அல்லது வர்ணிஷ் சேகரித்து வைத்திருத்தல்

வெற்றுச்சாக்குகள் சேகரித்து வைத்திருத்தல்

கரி சேகரித்து வைத்திருத்தல்

எந்திரத்தினுல் அல்லது மின்சாரத்தினுல் இயங்கும் நூல் நூற்கும், நெசவாலையொன்று வைத்திருத்தல்

தகர வேலைக்கடையொன்று வைத்திருத்தல்

விறகுக்காலையொன்று வைத்திருத்தல்

100 அந்தருக்கதிகமான சீமெந்து சேகரித்து வைத்திருத்தல்

புகையிலை சேகரித்து வைத்திருத்தல்

பாக்குகள் சேகரித்து வைத்திருத்தல்

(2) (2) ம் பந்தியின் இறுதியில் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலமும் :—

மூச்சுப்பானங்கள் உற்பத்தி செய்தல்

மிளகாய், கோப்பி, கோதுமை, தானியம், கறிச்சரக்குகள் அல்லது வேறு பருப்புகள் அரைத்தல்

மோட்டார் வாகனம் திருத்தும் கராஜ் ஒன்று வைத்திருத்தல்

காய்ச்சியிணைக்கும் அல்லது ஒட்சிஜியினுல் காய்ச்சியிணைக்கும் நிறுவனமொன்று வைத்திருத்தல்

மோட்டார் வாகனங்கள் திருத்தும் அல்லது அவற்றுக்கு நன்னிலைச் சேவையாற்று நிறுவனமொன்று வைத்திருத்தல்

தும்பாலையொன்று வைத்திருத்தல்

ஆபரணங்கள் உற்பத்தி செய்தல்

டயர்களை அல்லது ரியூப்களை வல்கனைஸ் செய்யும் நிறுவனமொன்று வைத்திருத்தல்

பைசிக்கிள் திருத்தும் இடமொன்று வைத்திருத்தல்

தச்சுத் தொழிற்கூடமொன்று வைத்திருத்தல்

தளபாடங்கள் செய்யும் நிறுவனமொன்று வைத்திருத்தல்

செக்கினுல் அல்லது எந்திரத்தினுல் தேங்காயெண்ணெய் உற்பத்தி செய்தல்

கடைச்சலெந்திரம் உபயோகிக்கப்படும் நிறுவனமொன்று வைத்திருத்தல்

(3) (3) ம் பந்தியின் இறுதியிற் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலமும் :—

கைகளினுல் அல்லது எந்திரத்தினுல் இயங்கும் மரமரியும் ஆலையொன்று வைத்திருத்தல்.

8–779—21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

காலி மாவட்டத்திலுள்ள மாதம்பைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ம் உட்பிரிவினுல் தமக்களிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட (257 ம் அதிகாரமாம்) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழான துணைவிதிகள்.

பி. சிறிவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி.
உள்நாட்டலுவல்கள் அமைச்சு

கொழும்பு 7. 1970 ம் ௵ யூலை மீ

#### துணைவிதிகள்

#### குழிதோண்டி முருகைக்கல் அல்லது சுண்ணும்புக்கல் எடுத்தல்

1. குழிதோண்டி முருகைக்கல் அல்லது சுண்ணும்புக்கல் எடுக்கும் தொழில் ஒரு அபாயகரமான தொழிலாக இத்தால் வெளிப்படுத்தப் படுகிறது.

2. துணைவிதி 1 ல் கூறப்பட்ட தொழிலை அதன் சார்பில் தலைவரால் வழங்கப்பட்ட உத்தரவுச்சீட்டின் பேரிலல்லாது எந்த நபரும் மேற் கொள்ளக்கூடாது.

3. துணைவிதி 2 இன் கீழ் உத்தரவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ள எவரும்—

(அ) அவ்வாறுன தொழிலை அவர் மேற்கொள்ளும் காணியிலுள்ள வேலி அல்லது எல்லை எதையும் மாற்ற அல்லது உருவழிக்க அல்லது சேதமுண்டுபண்ணக் கூடியவேறெந்தச் செயலைச் செய் தலாகாது. அல்லது

(ஆ) பொது வீதி அல்லது பாதை எதையும் தடைசெய்ய, சேதமுண்டு பண்ண அல்லது சேர்த்தெல்லையிடக்கூடாது, அல்லது

(இ) கடற்கரைமுனங்கின் எந்தப் பாகத்திலாவது முருகைக்கல் அல்லது சுண்ணும்புக்கல் தோண்டியெடுத்தலாகாது.

4. தலைவர் அல்லது தலைவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப் பட்ட சபையின் உத்தியோகத்தர் எவரும் துணைவிதி 1 இல் கூறப்பட்டுள்ள தொழில் மேற்கொள்ளப்படும் காணி எதற்குள்ளும் நியாயமான காலங் கள் எல்லாவற்றிலும் பிரவேசித்துப் பரிசோதிப்பது சட்டரீதியானதாகும்; அத்துடன் தலைவரை அல்லது அவ்வாறாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரை அக்காணிக்குள் பிரவேசிக்க அனுமதிப்பது அவற்றைப் பரிசோதிக்க அனுமதிப்பதும், துணைவிதி 2ன் கீழே உத்தரவுச்சீட்டு வழங்கப்பெற்றுள்ள நபரின் அல்லது அந்த நேரத்தில் அக்காணிக்குப் பொறுப்பாகவிருக்கும் வேறெந்த நபரின் கடமையாகும்.

5. தலைவர் அல்லது தலைவராலதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் எவரும் துணைவிதி 1 இல் கூறப்பட்டுள்ள தொழில் மேற்கொள்ளப் படும் எந்தக் காணியையும் பரிசோதிக்கும் வேளையில் அவ்வாறான காணிக்குள் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கும் எந்த ஒரு நபரையும் அவரது அறிவுக்கெட்டியவரை அவரை வேலைக்கமர்த்தியவரின் ஆளடையாளத் தைப்பற்றிய தகவலைக் கூறும்படி கேட்கலாம்; அவ்வாறான தகவலை அளிப்பது அவ்வாறான நபரின் கடமையாகும்.

6. இத்துணைவிதிகளில் எதையாவது மீறியதற்காக இரு தடவைகள் அல்லது அவற்றினுமதிகமாகத் தண்டிக்கப்பட்ட எந்த ஒரு நபரின் உத்தரவுச்சீட்டையும், விதிக்கப்படக்கூடிய வேறெந்தத் தண்டனைகளுடன் கூடுதலாகக் கிராம நீதிமன்றம் இரத்து செய்வது சட்டரீதியானதாகும்; அத்துடன் அவ்வாறான நபர் இந்த இரத்து சம்பந்தமாக எவ்வித நஷ்டஈட்டையும் பெறுவதற்கு அருகதையற்றவராகார்.

7. இத்துணைவிதிகளில்—

"ஒரு குழி" என்பது இரு நூறு சதுர அடி விஸ்தீரணத்துக்கு மேற் படாத ஒரு குழி எனப்பொருள்படும்.

"தலைவர்" என்பது மாதம்பைக் கிராமச் சபையின் தலைவர் எனப் பொருள்படும்.

8–767—21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

---

## எட்டியாந்தோட்டைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ், எட்டியாந்தோட்டைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக் கப்பட்ட துணைவிதிகள்.

பி. சிறிவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்ட லுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1970 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 5 ந் வ.

### துணைவிதிகள்

1. இத்துணைவிதிகள் எட்டியாந்தோட்டை விளம்பரத் துணைவிதி கள் 1970 என எடுத்தாளப்படலாம்.

2. தலைவரால் அதன் பொருட்டு வழங்கப்பட்ட ஒரு அனுமதிப்பத்தி ரத்தின் பேரிலன்றி வீதி, தெரு, வாய்க்கால் அல்லது ஏரி எதிலு மிருந்து பார்க்கக்கூடிய வண்ணம் விளம்பரம் எதனையும் எவரும் பார் வைக்கு வைக்கச் செய்யக்கூடாது. ஆயினும் இத்துணைவிதியின் முற் போந்த ஏற்பாடுகள், பின்வரும் விளம்பரங்கள் எதற்கும், அத்தகைய விளம்பரம் ஒரு ஒளியலங்கார விளம்பரமாக அல்லது வான் அடையாள மாக இருந்தாலன்றி, பொருந்தா—

(அ) தேறும் வருமானங்களை ஒரு தரும கைங்கரியத்தின் பொருட்டு உபயோகிப்பதற்கான ஒரு களியாட்டம்பற்றிய விளம்பரம்;

(ஆ) களியாட்டம் நடைபெறவிருக்கும் இடத்திலேயே பார்வைக்கு வைக் கப்பட்டிருக்கும் எக்களியாட்டத்தையும்பற்றிய ஒரு விளம்பரம்;

(இ) அரசாங்கத்தால் பார்வைக்கு வைக்கப்பட்ட ஒரு விளம்பரம்;

(ஈ) சமய, அரசியல் அல்லது பொதுக்கூட்டம் சம்பந்தமான ஒரு விளம்பரம்;

(உ) எக்கட்டடத்தினதும் சாளரத்திலிருக்கும் ஒரு விளம்பரம்

(ஊ) "வாடகைக்கு" எனும் ஒரு விளம்பரம்;

(எ) "விற்பனைக்கு" எனும் ஒரு விளம்பரம்;

(ஏ) வீட்டுக்குரிய ஒரு பெயர்த்தகடு;

(ஐ) தொழில் நோக்கங்களுக்காக உபயோகிக்கப்படும் ஒரு சதுர அடிக்கு மேற்படாத ஒரு பெயர்த்தகடு;

(ஒ) வியாபார நோக்கங்களுக்காக உபயோகிக்கப்படும் ஒரு வாகனத்தில் அவ்வாகனச் சொந்தக்காரரின் பெயரையும் முகவரியையும் காட்டும் ஒரு விளம்பரம்;

அல்லது

(ஓ) அங்கு நடத்தப்படும் ஒரு தொழிலை அல்லது வியாபாரத்தைப் பற்றிய அவ்விடத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு விளம்பரம்.

3. (1) எந்த விளம்பரத்தையும் பார்வைக்கு வைத்தற்கு அனுமதி கோரும் ஒவ்வொரு விண்ணப்பமும், அவ்விளம்பரத்தைப் பார்வைக்கு வைக்கத் தொடங்குதற்குக் கருதியுள்ள திகதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும்.

எனினும், விசேட சூழ்நிலைகளில் இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடு களில் குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் அனுப்பப்படாத விண்ணப்பங் களையும் தலைவர் ஏற்றல் கூடும்.

(2) (1) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றுடனும் விண்ணப்பதாரர் பார்வைக்கு வைக்கக்கருதியுள்ள விளம்பரத்தின் பிரதியொன்றையும், அது பார்வைக்கு வைக்கப்படவிருக்கும் இடத் தைக் காட்டும் ஒரு படத்தையும் அனுப்ப வேண்டும்.

(3) (1) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஒரு விண்ணப்பத்தை தலைவர் அங்கீகரிக்குங்கால் அவ்விளம்பரத்தைப் பார்வைக்கு வைத்தற்கான அனு மதிப்பத்திரத்துக்காக இதனுடன் இருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டி ருக்கும் விகிதங்களின்படி கணக்கிடப்படும் ஒரு கட்டணத்தைச் செலுத் தும்படி அவர் பணித்தல் வேண்டும். அத்தகைய கட்டணத்தைச் செலுத் தும்வரை அத்தகைய அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

4. (1) ஒரு விளம்பரத்தைப் பார்வைக்கு வைத்தற்கு எவருக்காயினும் ஒரு அனுமதிப்பத்திரம் வழங்கப்படமிடத்து தலைவர் அத்தகையவரை

(அ) அவ்வனுமதிப்பத்திரத்தின் இலக்கத்தையும் திகதியையும் அவ் விளம்பரத்தின் ஒவ்வொரு பிரதியிலும் சேர்க்கும்படி, அல்லது

(ஆ) அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணம் செலுத்தப்பட்டதற்கு அடை யாளமாக முத்திரையிடுதற்பொருட்டு அவ்விளம்பரத்தின் ஒவ் வொரு பிரதியையும் தலைவர் முன்கொண்டுவரும்படி, பணிப் பார்.

(2) இத்துணைவிதியின் (1) பந்தியின் கீழ் தலைவரால் பணிக்கப்பட்ட ஒவ்வொருவரும் அதற்குப் பணிந்து நடக்க வேண்டும்.

5. எவரேனும் ஒரு விளம்பரத்தை—

(1) அவ்விளம்பரம் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் கட்டப்பட அல்லது எழுப்பப்பட ஒரு முன்னீண்ட அடையாளமாக இருந் தாலன்றி, கட்டடக் கோட்டிலிருந்து தளப்பாங்காக அளக்கை யில் வீதி அல்லது தெரு எதனுள்ளும் ஆறு அங்குலத்துக்கு அதிக மான தூரத்துக்கு நீண்டிருக்கும்படி ஒரு விளம்பரத்தைப் பார் வைக்கு வைப்பிக்கவோ;

(2) நிலத்திலிருந்து இருபத்தியைந்து அடிக்கதிகமான உயரமுடைய அல்லது வீதி அல்லதுதெரு எதன்மீதும் நீண்டிருக்கும் ஒரு விளம் பரப்பலகையில் விளம்பரம் எதையும் பார்வைக்கு வைப்பிக்க வோ;

(3) வீதி அல்லது தெரு எதனினும் நீண்டிருக்கும் கட்டட முகப்பு ஒன்றில், அத்தகைய முகப்பின் எல்லைக்கப்பால் நீண்டிருக்கும் அல்லது உயரத்தில் எந்த இடத்திலாவது அதனடிக்கும் நடை பாதைக்கும் அல்லது நிலத்தின் அடிமட்டத்துக்கும் இடையிலுள்ள தூரத்தின் நான்கிலொரு பங்கிற்கு அதிகமாக இருக்கத்தக்க தாக கடைசிச் சின்னம் எதனையும் பொருத்தி வைக்கவோ அல்லது தொங்க விடச் செய்யவோ;

(4) தலைவரால் அங்கீகரிக்கப்படாத முறையில் வான் அடையாளம் எதனையும் கட்டுவிக்கவோ அல்லது எழுப்பிவிக்கவோ கூடாது.

6. பொது வணக்கஸ்தலம், பொது நந்தவனம் அல்லது மல சலகூடம் அல்லது ஏதாவது பாலம், வீதி, விளக்குத்தூண், தந்தி அல்லது தொலைபேசித்தூண் அல்லது மின்சாரக் கம்பித்தூண் எதன் மீதும் எவ்விளம்பரத்தையும் எவரும் பார்வைக்கு வைப்பிக்கக்கூடாது.

7. விளம்பரம் எதையும் பிரசித்தம் செய்யும் பொருட்டு வீதி அல்லது தெரு எதனிலும் கிராமபோன், சங்கீதக்கருவி, மணி அல்லது வேறு கருவி எதனையும் உபயோகிக்கக்கூடாது.

8. (1) விளம்பரம் எதுவும், தலைவரின் அபிப்பிராயப்படி விகாரமான அல்லது ஆட்சேபிக்கத்தக்க நிலையில் இருக்குமிடத்து, எழுத்து மூலமான அறிவித்தல் வாயிலாக அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படும் காலத்

துக்கும், அந்த விளம்பரத்தைப் பிரசித்தஞ் செய்வதை நிறுத்தும்படி அதனைப் பிரசித்தஞ் செய்பவருக்கு அவர் கட்டளையிடலாம்.

(2) (1) ம் பந்திக்கமையத் தலைவரிடமிருந்து ஒரு அறிவித்தலைப் பெறுபவர் அதில் குறிப்பிட்ட காலத்துக்குள் அவ்வறிவித்தலுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.'

9. விளம்பரங்களைப் பார்வைக்கு வைப்பதற்கான விளம்பரப்பலகை எதனதும் உடமையாளர் அல்லது குத்தகைக்காரர்—

(அ) அந்த விளம்பரப்பலகையைச் செம்மையாகவும் பாதுகாப்பாகவும் வைத்துப்பேணவும் ;

(ஆ) அந்த விளம்பரப்பலகையின் முன்புறத்தில் துலக்கமான ஒரு இடத்தில் அவரது பெயரையும் முகவரியையும் தெளிவானதும் எளிதில் வாசிக்கக் கூடியதுமான எழுத்துகளில் எழுதிவைக்கவும் வேண்டும்.

10. எந்த விளம்பரத்திலும், அந்த விளம்பரத்தைப் பார்வைக்கு வைப்பதற்குரிய அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணஞ் செலுத்தியமைக்கு அடையாளமாகத் தலைவரால் இடப்பட்டுள்ள அடையாளம், குறி, எழுத்து, சொல் அல்லது எண் எதனையும் எவரும் உருவழிக்கவோ அல்லது உரு வழிப்பிக்கவோ கூடாது.

11. எவரும்—

(அ) தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் அல்லது உருவில் அன்றி விளம்பரம் எதனையும் வாகனம் எதிலும் பார்வைக்கு வைத்தல் கூடாது.

(ஆ) பொலிஸ் கண்காணிப்பதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஒளியலங்காரம் தவிர்ந்த எந்த ஒளியலங்கார விளம்பரத்தையும் தாங்கிச் செல்லும் வாகனமெதையும் எவ்வீதியிலும் அல்லது தெருவிலும் செலுத்துவிக்கக்கூடாது.

12. இத்துணைவிதிகளின் ஏற்பாடுகள் எதனையும் மீறி நடக்கும் எவரும் ஒரு குற்றத்தைச் செய்த குற்றவாளியாவதோடு, குற்றவாளியாகக் காணப்படுகையில் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத அபராதம் ஒன்றும் தொடர்ந்தும் மீறி நடப்பாராயின் குற்றவாளியாகக் காணப்பட்ட அல்லது மீறியசெயலைக் கவனத்துக்கு எடுக்குமாறு தலைவர் மூலம் அறிவித்த பின்னர் தொடர்ந்தும் அம்மீறிய செயலைச்செய்யும் ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தியைந்து ரூபாவுக்கு மேற்படாத மேலதிக அபராதம்ஒன்றும் விதிக்கப்படப்பாத்திரராவார்.

13. சந்தர்ப்பம் வேறு கையில் இருந்தாலன்றி—இத்துணைவிதிகளில் "விளம்பரம்" என்பது காணி, கட்டடம் அல்லது அமைப்பு எதற்கும் மேல் அல்லது எதனிலும் ஒட்டியிருக்கும் முற்றுகவோ அல்லது பகுதியாகவோ விளம்பர நோக்கமாக அல்லது விளம்பரப் பாங்காகவுள்ள சொல், எழுத்து, எண், அடையாளம், சுவரொட்டி, பலகை அறிவித்தல், சின்னம் பிரதிமை அல்லது ஒப்பாக்கம் எதனையும் உட்படுத்தும். "தலைவர்" எனில் சபையின் தலைவர் எனப் பொருள்படும். "சபை" எனில் எட்டியாந்தோட்டைப் பட்டின சபை எனப் பொருள்படும்.

"விளம்பரப் பலகை" எனில் விளம்பரம் எதனையும் பார்வைக்கு வைத்தற்காக எழுதப்படும் அல்லது உபயோகிக்கப்படும் அமைப்பு, ஆதாரம், கம்பம், பலகை, சுவர், பெட்டி அல்லது வேறு உபாயம் எதுவும் எனப்பொருள்படும் ; மேலும் "வான்குறி" என்பது வீதி, தெரு, எதனிலுமுள்ள எதாவது ஒரு இடத்திலிருந்து வானத்தைப் பின்னணியாகக் கொண்டு முற்றுகவோ அல்லது பகுதியாகவோ பார்க்கக் கூடியதாகவுள்ள காணி, கட்டடம் அல்லது வேறு அமைப்பு எதிலும் அல்லது எதற்கு மேலாகவும் உள்ள தூண், தடி, கம்பம் அல்லது சட்டம் எதனிலும் பொருத்தப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட விளம்பர நோக்கத்துக்காக உபயோகிக்கப்படும் சொல், எழுத்து, மாதிரி, குறி, சின்னம் அல்லது ஒப்பாக்கம் எதனையும் குறிப்பதோடு, காணி, கட்டடம், அமைப்பு அல்லது வீதி எதிலும் அல்லது எதற்கு மேலேயும் விளம்பர நோக்கமாக முற்றுகவேனும் அல்லது பகுதியாகவேனும் உபயோகிக்கப்படும் வாயுக்குண்டு, பாராக்குடை, இழுவண்டி அல்லது அதனையொத்த உபாயம் எதனையும் உட்படுத்தும்.

அட்டவணை

விளம்பரத்தின் விபரம் :—

| | ஒரு மாதத்துக்குக் கூடுதலாக ஆனால் ஆறுமாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு | | ஆறு மாதங்களுக்கு கூடுதலாக ஒரு வருடத்துக்கு |
|---|---|---|---|
| | ரூ. ச. | | ரூ. ச. |
| ஒரு சுவரில் அல்லது விளம்பரப் பலகையில் பார்வைக்கு வைக்கப்படும் (திரைப் படக்களியாட்டம் சம்பந்தமான விளம்பரமல்லாத) ஒரு விளம்பரத்தின் ஒவ்வொரு சதுர அடிக்கும் .. | 0 75 | .. | 1 50 |
| எவராலேனும் சுமந்து செல்லப்படும் அல்லது ஒரு நகரும் வாகனத்தில் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு பலகையில் அல்லது ஆதாரத்தில் பார்வைக்கு வைக்கப்படும் (ஒரு திரைப்படக் களியாட்டம் சம்பந்தமான விளம்பரமல்லாத) ஒரு விளம்பரத்துக்கு : | | | |
| (அ) அந்த விளம்பரம் ஆறு சதுர அடிக்கு மேற்படாவிட்டால் ஒவ்வொரு சதுர அடிக்கும் .. | 0 75 | .. | 1 50 |
| (ஆ) அந்த விளம்பரம் ஆறு சதுர அடிக்கு மேற்பட்டால் ஒவ்வொரு சதுர அடிக்கும் .. | 1 50 | .. | 3 0 |
| திரைப்படக் களியாட்டம் சம்பந்தமான ஒரு விளம்பரத்தின் ஒவ்வொரு சதுர அடிக்கும் .. | 0 25 | .. | 0 50 |

8–768—21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

---

# உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

திரு. எஸ். எ. குணசேகர, (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 4 (1) (சீ) பிரிவின்கீழ், 1970, செத்தெம்பர் 1 இல் இருந்து மாத்தறை மாவட்டத்து தேர்தல்கள் உதவி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளாரென்று, இத்தால், பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகின்றது

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஓகத்து மீ 12 ந் உ

உ–751/1—21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்,(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 4 (1) (சீ) பிரிவின்கீழ், 1970, ஓகத்து 17 இல் இருந்து அவர்களின் பெயர்களுக்கு நேரே காட்டியுள்ள மாவட்டங்களது தேர்தல்கள் உதவி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்களென்று,இத்தால், பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகின்றது.

கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஓகத்து மீ 12 ந் உ.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி (உள்ளூர்ச் சபைகள்).

அட்டவணை

| | பெயர் | | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | திரு. எம். ஆர். கணபதி | .. | கண்டி |
| 2. | திரு. ஆர். ஐ. சீ. குருப்பு | .. | குருநாக்கல் |
| 3. | திரு. எஸ். கந்தசாமி | .. | வவுனியா |
| 4. | திரு. கே. ஏ. பர்ஞுந்து | .. | மாத்தளை |
| 5. | திரு. என். பத்மநாதன் | .. | மட்டக்களப்பு |

8–751/2—21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

---

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள், அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிப்பிட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 66 (2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு, 1970 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 12 ந் உ.

அட்டவணை

| வட்டார இல. | | அபேட்சகர்களின் பெயர் |
|---|---|---|
| | | **அனுராதபுரம் மாவட்டம்** |
| | | **விளச்சிய கோரளை வடக்கு கிராமச் சபை** |
| 14 | .. | ஹொரதலாகே சேனரத்ன |
| | | **கலென்பிந்துனுவெவ கிராமச் சபை** |
| 1 | .. | மல்காமிகே பின்காமி |
| | | **புத்தளம் மாவட்டம்** |
| | | **மெத பலாத்த கிராமச் சபை** |
| 8 | .. | முகம்மது இப்ருகிம் முகம்மது சரீபு |
| 12 | .. | அசனு லெவ்வை அபூசாலி |
| | | **மாத்தளை மாவட்டம்** |
| | | **மாத்தளை உடசியபற்றுவ கிராமச் சபை** |
| 7 | .. | கனேகொடகம ஜயசிங்க ஆரச்சிகே அல்பிரேனு குணதிலக்க |
| | | **குருணக்கல் மாவட்டம்** |
| | | **நாரமல்ல கிராமச் சபை** |
| 1 | .. | கொடகுரு சேதுங்க முதியன்செலாகே ஹேரத் பண்டா |

8–748—21.8.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,920

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### அட்டவணை— 1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| ஓகத்து .. | 7. 8.70 | வெள்ளி .. | 30. 7.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |
| | 14. 8.70 | வெள்ளி .. | 7. 8.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 21. 8.70 | வெள்ளி .. | 14. 8.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 28. 8.70 | வெள்ளி .. | 21. 8.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் .. | 4. 9.70 | வெள்ளி .. | 27. 8.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 11. 9.70 | வெள்ளி .. | 4. 9.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி .. | 11. 9.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி .. | 18. 9.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| ஒற்றோபர் .. | 2.10.70 | வெள்ளி .. | 25. 9.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி .. | 2.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி .. | 9.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி .. | 16.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி .. | 23.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| நவெம்பர் .. | 5.11.70 | வியாழன் .. | 30.10.70 | வெள்ளி .. | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் .. | 5.11.70 | வியாழன் .. | ந.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி .. | 12.11.70 | வியாழன் .. | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி .. | 20.11.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| திசெம்பர் .. | 4.12.70 | வெள்ளி .. | 27.11.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி .. | 4.12.70 | வெள்ளி .. | ந.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி .. | 10.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் .. | 17.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் .. | 24.12.70 | வியாழன் .. | பி.ப. | 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 5 ஆந் வ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.